**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 8 March 2018

Nestlé Good Food, Good Life

# "Dessert" பிரியர்களுக்கு சாதாரண இனிப்பு உணவுகளை அதிசிறந்தவையாக மாற்றும் வகையில் செழுமையும் அற்புத சுவையும் கொண்ட *Milkmaid Choco Topping* உற்பத்தியை நெஸ்லே அறிமுகப்படுத்தியுள்ளது

நாவில் சுவையூறச் செய்யும் இனிப்பு உணவு வகைகளுக்கு (dessert) பெயர்போன *Milkmaid*, தற்போது *Milkmaid Choco Topping* என்ற புதிய உற்பத்தி வடிவத்தை அறிமுகப்படுத்தி இனிப்பு உணவுப் பிரியர்களை தொடர்ந்தும் பூரிப்படையச் செய்துள்ளது. பிரபலமான கரமல் பாற்சுவை மற்றும் அற்புதமான சுவை கொண்ட உயர் தர கொக்கோ என அனைவரும் நேசிக்கும் தனிச்சிறப்பு மிக்க *Milkmaid* உற்பத்தியின் அனைத்து சிறப்பம்சங்களையும் புத்தாக்கம்மிக்க இப்புதிய உற்பத்தி வடிவம் கொண்டுள்ளதுடன், அனைவரின் சுவையரும்புகளையும் தூண்டுகின்ற சொக்கிலேட் சோஸ் மற்றும் ஹாஸெல் பருப்பு (hazelnut) ஆகியவற்றின் நலச்சுவையை வழங்குகின்றது.

நாம் இல்லங்களில் உணவுகளைத் தயாரிக்கும் போது மிகவும் சாதாரண உணவுகளைக் கூட அதிசிறந்த தருணங்களாக இலகுவாக மாற்றியமைப்பதற்கு *Milkmaid Choco Topping* உதவுகின்றது. பல்வகையான அற்புத சுவை கொண்ட இதனை ஐஸ்கிறீம், குழியப்பம் (waffles), பான்கேக் (pancakes), மில்க்ஷேக் (milkshakes) மற்றும் பாணில் பூசி உண்பது, பழங்களை தோய்த்து அமிழ்த்துவது அடங்கலாக பல்வேறு வகைப்பட்ட உணவுகள் மற்றும் பான வகைகளில் topping ஆக பயன்படுத்த முடியும்.

நெஸ்லே நிறுவனத்தின் பாலை மூலமாகக் கொண்ட உற்பத்திப் பிரிவுக்கான பிரதித் தலைமை அதிகாரியான ருவன் வெலிக்கல அவர்கள் கூறுகையில்: *"மக்கள் தாங்கள் விரும்புகின்றவாறு அற்புதமான சுவை கொண்ட இனிப்பு உணவுகளைத் தயாரிப்பதற்கு அவர்களை வலுவூட்டுவதே Milkmaid இன் தனித்துவமாகும். தலைசிறந்த சமையல் நிபுணர்கள் கூட அற்புதமான சுவைமிக்க இனிப்பு உணவுகளைத் தயாரிக்கும் போது வெவ்வேறு இனிப்பு உணவு சோஸ் வகைகளை உபயோகிக்கின்ற நிலையில், Milkmaid பிரியர்களும் தாங்கள் தயாரிக்கின்ற இனிப்பு உணவு வகைகளின் சுவையை மேலும் அதிகரிப்பதற்கு உதவ நாம் விருப்பம் கொண்டுள்ளோம். மிகவும் சாதாரணமான மற்றும் எளிமையான இனிப்பு வகைகளைக் கூட அதிசிறந்த உணவு வகைகளாக மாற்றியமைக்கும் வகையில் கவர்ச்சியான தோற்றத்தையும், வியக்கவைக்கும் சுவையையும் சேர்ப்பிப்பதற்கு உதவும் வகையில் Milkmaid பிரியர்களுக்கு Milkmaid Choco Topping இனை அறிமுகம் செய்து வைப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம்,"* என்று குறிப்பிட்டார்.

வீட்டில் தயாரிக்கப்படுகின்ற மிகவும் மென்மையான சொக்கிலேட் சோஸ் இனைப் போன்று அதே சுவையையும், புத்தம்புதிய தன்மையையும் கொண்டுள்ள *Milkmaid Choco Topping* ஆனது உணவுத் தொழில்நுட்பத்தில் உலகில் நெஸ்லே நிறுவனத்தின் முன்னிலை அனுபவம் மற்றும் அதிசிறந்த செய்முறையை உருவாக்குவதற்காக உழைக்கும் பிரபலமான சமையல் நிபுணர்களின் சமையல் திறன்கள் ஆகியவற்றின் கூட்டுப் பயன்களை வழங்குகின்றது.

நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறும் போது: *"பல்வகை அம்சம் என்பது உணவிற்கு இன்பத்தைச் சேர்ப்பிப்பது என நாம் உறுதியாக நம்புவதுடன், தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களையும் உணவுகளின் பல்வகை வடிவங்களை வழங்குவதில் நெஸ்லே நிறுவனம் தனித்துவமான ஒரு ஸ்தானத்தில் உள்ளது. குடும்பத்தில் அனைவருக்கும், ஒவ்வொரு உணவு வேளையின் போதும், தினத்தில் ஒவ்வொரு தருணத்திற்குமான பல்வேறு தெரிவுகளைக் கொண்டிருக்கும் வகையில் எமது உற்பத்தி வரிசை வடிவமைக்கப்பட்டுள்ளது. பல்வகை இனிப்பு உணவுகளுக்கான சேர்க்கைப்பொருளாக எத்தனையோ தலைமுறைகளாக நம்பிக்கையை வென்றெடுத்துள்ள ஒரு வர்த்தகநாமமாக Milkmaid திகழ்வதுடன், Milkmaid Choco Topping மூலமாக தமது உணவுகளுடன் தனித்துவமான இனிப்பு உணவுகளை மேம்படுத்துவதற்கு எமது நுகர்வோருக்கு உதவுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம்,"* என்று குறிப்பிட்டார்.

பாலேடு மற்றும் அற்புத சுவை கொண்ட *Milkmaid*, நாடெங்கிலும் பசுமையான மேய்ச்சல் நிலங்களில் மேய்கின்ற பசுக்களிலிருந்து தருவித்து, பல்லாயிரக் கணக்கான இலங்கை பாற்பண்ணையாளர்கள் விநியோகிக்கின்ற புத்தம்புதிய, நலச்செழுமைமிக்க பாலை உபயோகித்து தயாரிக்கப்படுகின்றது. உலகெங்கிலும் நெஸ்லே நிறுவனத்தின் புகழ்பெற்ற அதியுயர் தர நடைமுறைகளைப் பேணியவாறு, குருணாகலில் அமைந்துள்ள நெஸ்லே நிறுவனத்தின் அதிநவீன தொழிற்சாலையில் இது உற்பத்தி செய்யப்படுகின்றது.